**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.65/2025** |
| Deposition of witness | : | P.W.5 |
| Name | : | வினோத் |
| Father's /Husband Name | : | சின்னையன் |
| Village | : | எண்கண் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 38 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of July 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. அ.சா.4 கண்ணனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் எண்கண் கீழக்காலணியில் வசித்து வருகிறேன். அதே தெருவில் இந்திராணி கணேசன் என்பவருடைய வீடு உள்ளது. ஆஜர் எதிரியினுடைய வீடு இந்திராணி கணேசன் வசிக்கும் வீட்டுக்கருகே உள்ளது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். ஆஜர் எதிரி வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் பத்து வீடு தூரத்தில் உள்ளது. இந்திராணி வீட்டு கூரையை பிய்த்தது சம்மந்தமாக அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே சண்டை நடந்தது சம்மந்தமாக குடவாசல் போலீசார் வந்து விசாரித்தார்கள் என்றால் என்னை விசாரிக்கவில்லை. பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை குடவாசல் உதவி ஆய்வாளரிடம் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார்

என் முன்னிலையில் 17.06.2024ம் தேதி பகல் 02.00 மணியளவில் இவ்வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை என்றும் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்ட போது நான் வெளியூருக்கு சென்றுவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.07.22 11:11:53 +05'30'

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.